மதுராந்தகம் தொகுதி, மாமண்டூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தொகுதி, மாமண்டூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

271—

துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 2598—திரு. க. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், பெரியகன்னனூர் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், பெரியகன்னனூர் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

272—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 4321—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், வடக்கு விஜய நாராயணத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், வடக்கு விஜய நாராயணத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

273—

மேல்நிலைப் பள்ளி துவங்குதல்

வினா எண் 25—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக மேல்நிலைப்பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மதுஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக மேல்நிலைப்பள்ளி துவக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.